# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.334/பேரூ/2023
நாள். 28 .12.2023

திரு.M.பாலசுப்ரமணியன்,
அண்ணாமலை நகர், சிதம்பரம் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி
சிதம்பரம் – எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவரின்11.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2023 அன்று பெறப்பட்டு, 334/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவர் தனது 11.10.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள பாண்டியன் என்பவர் மீது அண்ணாமலைநகர் பேரூராட்சி நிர்வாகம் வழக்கு எண் 110/2018ன் கீழ் வழக்குபோட்டு வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்குள் நீதிமன்றத்தில் எனது தெருவிற்கு வடிகால் அமைப்பதற்கு proposal எனப்படும் முன்மொழிவு அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பொய்யான தகவலை அளித்து எனக்கு கிடைக்க வேண்டிய நீதியை கிடைக்கவிடாமல் பேரூராட்சியின் E.O.வெங்கட்ராமனும் A1 கிளார்க் பாஸ்கரனும் A2செல்வமும், மேஸ்திரி சுப்ரமணியனும் தடுத்துள்ளனர். நீதிமன்றத்திதல் பேரூராட்சி பணியாளர்கள் தெரிவித்துள்ளவாறு பேரூராட்சி நிர்வாகம் அரசிற்கு proposal எனப்படும் முன்மொழிவு இதுநாள் வரை அனுப்பப்படவில்லை என நகராட்சி நிர்வாகத்தின் அரசு இணைச்செயலாளர் எனக்கு 14.08.2023 தேதியிட்ட கடிதத்தின் கீழ் தெரிவித்துள்ளார். 2016ம்

ஆண்டு முதல் இன்று வரை A 1 கிளார்க் பாஸ்கரன் என்பவரும், மேஸ்திரி சுப்ரமணியனும் A2 கிளார்க் செல்வமும் 17B எனப்படும் பணிநீக்க ஆணை பெற்று மூவரும் ஒரே பேரூராட்சியில் தொடர்ந்து பணிபுரிவது மீண்டும், மீண்டும ஊழலை ஏற்படுத்துகிறது. இதனால் நிர்வாக குறைபாடும் ஏற்படுகிறது.

17 B எனப்படும் குறிப்பாணை மூவருக்கும் வழங்கப்பட்டு 2020 முதல் இன்று வரை இந்த மூவரும் துறைரீதியாக பணியிலிருந்து நீக்கப்படாமல் இருப்பதும் வேறு ஊர்களுக்கு பணியிடமாற்றம் செய்யப்படாமல் இருப்பதும் எனக்கு வேதனை அளிக்கிறது. மேற்கூறிய மூவரும் 2018 ஆண்டு உருவான கொரோனா நோய் காலகட்டத்தில் மக்கள் பேரூராட்சிக்கு செலுத்திய வரி பணம் ரூபாய் 1 கோடியே 38 லட்சத்து, 63 ஆயிரத்து 684 ரூபாய் கூட்டாக சேர்ந்து கொள்ளை அடித்து ஊழல் செய்துள்ளனர் என பேரூராட்சியை கள ஆய்வு செய்து இயக்குநருக்கு செல் ஆபிசர் அளித்துள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது.

28.02.2020ல் பாஸ்கரன், செல்வம், சுப்ரமணியன் மூவரும் குற்றச்சாட்டு குறிப்பாணை பெற்றுள்ள நிலையில் இன்றுவரை இவர்களை பணியிலிருந்து நீக்க கோரியும், பணியிடமாற்றம் செய்ய வேண்டியும் பலமுறை இயக்குநருக்கும், இணை இயக்குநருக்கும், உதவி இயக்குநருக்கும் நான் எத்தனை முறை கடிதங்களை அனுப்பியும் எனக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. மேலும் மேற்கூறிய மூவரும் நீதிமன்ற நீதிபதியையே பொய்கூறி ஏமாற்றி உள்ளார்கள். எனவே நான் இக்கடிதத்தோடு அனுப்பியுள்ள அனைத்து ஆவணங்களையும் கூராய்வு செய்தும் பாஸ்கரன், செல்வம், சுப்ரமணியனை பணியிலிருந்து உடனே நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இந்த மூவரும் எதிர்வரும் 2024ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு றெம் காரணத்தால் உள்ளாட்சி மன்ற முறைநடுவர் அவர்கள் இந்த ஒரு மனுவை மட்டும் உடனே ஏற்று போர்க்கால அடிப்படையில் விசாரணை செய்து 5 ஆண்டுகளாக இலஞ்ச, ஊழல்களை ஒழித்து வளமான பாரதத்தை உருவாக்க பாடுபடும் சமூக ஆர்வலரான எனக்கு நீதியை வழங்கிடுமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அண்ணாமலை நகர் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு பின்னர் 20.12.2023 நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 20.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலம் சமர்ப்பிக்கவில்லை.

5) அண்ணாமலைநகர் பேரூராட்சி செயல் அலுவலர் 20.12.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்:–

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிப்பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த எனது 19.12.2023 நாளிட்ட வாதுரையை இம்முறைமன்றத்தில் முன் சமர்ப்பித்து அதில் உள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) அண்ணாமலைநகர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது உண்மைக்கு புறம்பான அம்சங்களுடன், சட்டத்திற்கு அப்பாற்பட்டும் அமைந்து காணப்படுகிறது. மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும். கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் அண்ணாமலை நகர் பேரூராட்சியானது கடந்த 04.04.1963ம் ஆண்டு முதல் முதல்நிலை பேரூராட்சியாக துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு 31.05.1994ம் வருடம் முதல் சிறப்புநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இப்பேரூராட்சியின் எல்லைக்குட்பட்டு அமைந்து பல மாணவி மாணாக்கர்களின் கல்வி திறன் மேம்பாடு அடைய பயன்பட்டு வருகிறது.பல சிறப்பு மிக்க பேரூராட்சி மன்ற தலைவர்கள், செயல்திறன் மிக்க செயல் அலவலர்கள் இப்பேரூராட்சியில் நன் முறையில் பணிபுரிந்து வந்துள்ளனர். இப்பேரூராட்சியின் மொத்த ஜனத்தொகை 16500ம் 15 வார்டுகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. இப்பேரூராட்சியில் திறன்மிக்க செயல் அலவலர், சுமார் 8 அலுவலக பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் 15 நபர்கள், திடக்கழிவு பணியாளர்கள், டெங்கு களப்பணியாளர்கள் மற்றும் குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மொத்தமாக 47 நபர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ளது போல் அவர் எவ்வித சமூகப்பணியும் பொதுமக்களுக்கு செய்வதில்லை. மற்றும் எவ்வித பொதுநலன் சார்ந்த செயற்பாட்டாளர் இல்லை.மாறாக மனுதாரர் அண்ணாமலைநகர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலவலர் மற்றும் பணியாளர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் புகார் மனுக்களை அனுப்பி உள்ளார். மேலும்,இதன் அடிப்படையில் பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களை பொய்யான புகார்களை கூறி தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நினைக்கிறார். மேலும், மனுதாரரின் அடிப்படை உரிமை நிலையை மீற செயல்படும் வண்ணம் (Beyond the limit) எல்லாவிதமான பேரூராட்சியின் பணிகளில் தலையிட்டு மனுதாரரை கண்டு எல்லோரும் பயப்பட வேண்டும் என்ற நோக்கிலும், அதிகார தோரணையில் தான் சொல்லும் சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயற்பாடுகளையும் செய்து தர வேண்டும் என்ற ஆணவ போக்கில் செயல்பட நினைக்கிறார்.

மேண்மைமிகு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம் அசல் வழக்கு எண்.110/2018 செயல் அலுவலர், அண்ணாமலைநகர் பேரூராட்சி – வாதியாகவும், கருட்டு பாண்டியன் என்பவர் பிரதிவாதியாகவும் நிலையில் வழக்கின் பிரதிவாதி தமது வீட்டு கழிவுநீர், செப்டிக் டேங்க் தண்ணீர் யாவற்றையும் பொது வெளியில் விடுவதை தடுக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் உபய தரப்பினரிடைய சமரசம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் "லோக் அதாலத்" லோக் அதாலத் கேஸ் எண். 44/2019 கடந்த 09.03.2019ல் சமரச தீர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு உத்திரவும் பெறப்பட்டுள்ளது. உத்திரவில் வாதி வழக்கினை வாபஸ் பெற்றுக் கொண்டு வழக்கின் B இனச்சொத்தில் பூங்காவின் மற்றும் எட்டாவது கிராஸ் வடிகால் அமைப்பதற்கு அரசுக்கு proposal அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சியில் A-1(பிரிவு) இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.பாஸ்கரன், M.A. என்பவர் கடந்த 2003ல் அரசு ஊழியர்கள் strike செய்த காலகட்டத்தில் தமிழ்நாடு அரசால் தற்காலிக பணி அடிப்படையில் மாதாந்திர சம்பளமாக ரூ.4000/– வருவாய் துறையில் நியமனம் செய்யப்பட்டு கடந்த

2009ம் ஆண்டில் தமிழக அரசின் நல்லெண்ண அடிப்படையில் TNPSC – பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு 2009ம் ஆண்டு இளநிலை உதவியாளராக நிரந்தர அடிப்படையில் பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் பணியில் சேர்ந்துள்ளார். 2011ம் ஆண்டு கிள்ளை பேரூராட்சிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டு பின்னர் 2013ல் தொரப்பாடி பேரூராட்சிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.கடந்த 2016ம் ஆண்டில் அண்ணாமலைநகர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து நன்முறையில் பணியாற்றி வந்துள்ளார். மேற்படி திரு. பாஸ்கரன் 31.01.2024ல் வயது மூப்பு அடிப்படையில் ஓய்வு பெற உள்ளார்.

அண்ணாமலை சிறப்பு நிலை பேரூராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர் மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) திரு.சுப்பிரமணியன் என்பவர் கடந்த 1999ம் ஆண்டு பேரூராட்சி பணியில் பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணி நியமனம் பெற்று 2005ம் ஆண்டு வரை பணி மேற்கொண்டிருந்த நிலையில் 2006ம் ஆண்டு உதவி இயக்குநர் அலுவலகத்தில் (Asst. Director of Town Panchayat, Cuddalore) ஆள் பற்றாக்குறை காரணமாக Deputationல் பணிக்கு அனுப்பப்பட்டுள்ளார். 2013ம் வரை பணிபுரிந்து வந்த நிலையில் 2013ம் ஆண்டு அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சியில் பணிஉயர்வு பெற்று சுகாார பிரிவில் துப்புரவு மேற்பார்வையாளறாக பணியில் சேர்ந்துள்ளார். இவ்வாறுள்ள நிலையில் மனுதாரர் ஏரூதா மனுவுக்கு வலு சேர்க்கும் விதமாக தவறான தகவல்கள் அதாவது தொடர்ந்து ஒரே இடத்தில் பணிபுரிந்து வருவதாக கூறியுள்ளது உண்மைக்கு மாறான அம்சமாகும். மேலும் மேற்கண்ட இரு நபர்கள் மீது பேரூராட்சியின் இயக்குநர், சென்னை அவர்கள் அனுமானத்தின் பேரில் பேரூராட்சிக்கு சில இனங்கள் கொள்முதல் செய்ததில் இழப்பீடு ஏற்படுத்தியதாக தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரு நபர்களுக்கும் 28.02.2020ல் குற்றச்சாட்டு குறிப்பாணை மூலம் தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி எண் 17(b) கீழ் 9 குற்றச்சாட்டுக்கள் ஏற்படுத்தப்பட்டது. மேற்கண்ட குற்றச்சாட்டகளை விசாரணை செய்வதற்கு விசாரணை அலுவலராக திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. காளியப்பன் என்பவரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட நபர்களால் உரிய விளக்கம் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைநடைபெற்று முடிவில் குற்றச்சாட்டுகளின் இறுதி முடிவு (Findings of ech article of charges) "மேற்கண்ட 9 குற்றச்சாட்டுகளில் 9 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகததால் விதிமுறைகளுக்கு முரணாகவும் தமது கடமையில் நேர்மையின்றியும் பற்றுதலின்றியும் பணியுரிந்து தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகள் 1973 விதி எண் 20–ஐ மீறியுள்ளார் என்பதும் நிரூபணமாகவில்லை என விசாரணை அலுவலரால் அறிக்கை முடிக்கப்பட்டு இறுதி முடிவிற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இறுதி முடிவு எடுக்கப்படாத நிலையில் இவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையோ, பணி இட மாற்றமோ செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மனுதாரர் மனுவில் தான் ஏதோ அரசாளும் ஆட்சியாளர் போல் செயல்பட நினைக்கிறார். இது சட்டத்திற்கு புறம்பான செயலாகும்.மனுதாரர் சட்டத்தை துளிகூட மதிப்பவர் கிடையாது. அண்ணாமலைநகர் காவல் நிலையத்தில் மனுதாரர் மீது 4 கிடீயனள வழக்குகள் நிலுவையில் உள்ளது என காவல் ஆய்வாளர், அண்ணாமலைநகர் காவல்நிலையம் சான்று அளித்துள்ளார். இவ்வாறுள்ள ஒரு நபர் எவ்வாறு மற்றவர்களை குறை காண்கிறார். நீதியை மதிக்காதவர் எவ்வாறு நீதி கிடைக்கவில்லை என கூக்குரல் இடுகிறார். மனுதாரர்க்கு நீதி கிடைக்க வேண்டுமெனில் மேண்மைமிகு உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து பரிகாரம் மேற்கொள்ளலாமே.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டவாறு செல்வம் என்ற நபர் அண்ணாமலை நகர் பேரூராட்சியில் பணிபுரியவில்லை. T.செல்வராஜ் என்பவர் இளநிலை உதவியாளர் (A2) பணிபுரிந்து வந்து 2020ம் ஆண்டு பணியிட மாற்றம் பெற்று கிள்ளை பேரூராட்சியில் பணிபுரிந்து வருகிறார். திரு.வெங்கட்ராமன் என்பவர் 2018–2020ல் காலகட்டத்தில் செயல் அலுவலர், அண்ணாமலைநகர் பேரூராட்சியில் பணிபுரிந்து வந்து பின்டினிட்டு வேலூர் மாவட்டம் திமிரி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியிடமாற்றம் பெற்றுள்ளார்.

ஒருவர் குற்றச்சாட்டு குறிப்பாணை பெற்றதானாலேயே குற்றவாளி என முடிவு செய்ய இயலாது. குற்றம் நிருபணம் செய்யப்படும்பட்சத்தில் தான் குற்றவாளிக்கு உண்டான தண்டனை தர இயலும். அதுபோன்று குற்றச்சாட்டுக்கு ஆளான 2 நபர்களும் குற்றமற்றவர்கள் என விசாரணை அலுவலர் அவர்களால் உரிய அறிக்கை பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இறுதி முடிவு வரவில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் மீது கிரிமினல் வழக்குகள் பதியப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர் எவ்வாறு லஞ்ச, ஊழல்களை ஒழித்து வளமான பாரதத்தை உருவாக்கும் சமூக ஆர்வலராக செயல்படமுடியும். மனுதாரர் சமூக ஆர்வலர் என்ற போர்வையில் எல்லோரையும் மிரட்டி சட்டத்திற்கு புறம்பான காரியங்களை தமக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள செயல்பட்டு வருகிறார். சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்பவர்கள் தேசத்துரோகிகளே. மனுதாரர் புகார் மனு நிலைக்கத்தக்கதல்ல மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும்.

பின்னிட்டு எதிர்மனுதாரர்க்கு புகார் மனு சம்மந்தமாக ஏதும் கூடுதல் ஆவணங்கள கிடைக்கப்பெறும் பட்சத்தில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையும் எதிர்மனுதாரர் நிலைநிறுத்திக் கொள்கிறோம் (reserve the rights to be filed the additional written statement)

ஆகவே, மேண்மைமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரரின் தவறான புகார் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய இம்எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அண்ணாமலை நகர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

அண்ணாமலைநகர் பேரூராட்சியில் முன்னாள் E.O. லெட்சுமணன், A1 கிளார்க் பாஸ்கரன், A2 கிளார்க் செல்வம் மேஸ்திரி சுப்பிரமணியன் ஆகியோர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும் இந்த நால்வரும் ஊழல் செய்து சட்டத்திற்கு புறம்பாக சம்பாதித்துள்ள பணத்தை பேரூராட்சி வசம் திரும்ப செலுத்தவும் கொரானா தொற்று நோய் காலகட்டத்தில் பேரூராட்சிக்கு செலுத்திய வரி பணத்தினை கொள்ளையடித்துள்ளார்கள் என்றும் திரு.பாஸ்கரன், செல்வம் மற்றும் சுப்பிரமணியன் ஆகிய மூவரும் குற்றச்ச்சாட்டு குறிப்பாணைகள் பெற்றுள்ள நிலையில் அவர்களை பணி மாற்றம் மற்றும் பணியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் வேண்டியுள்ளார்.

அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சியில் பணிபுரியும் சில அலுவலர்கள் மீது குற்றச்சாட்டுகள் குறித்து பேரூராட்சிகளின் இயக்குனரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செயல் அலுவலர் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

இந்நிலையில் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களின் மீது பேரூராட்சிகளின் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் மனுதாரரின் மனுவின் மீது இம்முறைமன்றத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என கருதி இத்துடன் முடித்து வைக்கலாமென தீர்மானித்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் 20.12.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலத்தை சமர்ப்பிக்காமல் சென்றது இம்முறைமன்றத்தை அவமதித்தாகக் கருதி மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் இம்முறைமன்றத்தின் மாண்பையும் நேரத்தையும் விரயமாக்கிய கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8வது குறுக்குத் தெருவில் வசிக்கும் திரு.M.பாலசுப்ரமணியம் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.பாலசுப்ரமணியன்,
8th. Cross street,
K.R.M.நகர்,அண்ணாமலை நகர்,
சிதரம்பரம் வட்டம்,கடலூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர் சிறப்பு நிலை பேரூராட்சி,
அண்ணாமலைநகர்,சிதம்பரம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்